

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 30.12.2025

# யார் கொடுக்கும் தைரியம் இது?

கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு டெல்லியில் உள்ள கத்தீட்ரல் மீட்பின் தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார். “டெல்லி தேவாலயத்தில் கிறிஸ்துமஸ் வழிபாட்டில் கலந்து கொண்டேன். இந்த வழிபாடு காலத்தால் அழியாத அன்பு, அமைதி, இரக்கத்தின் செய்தியை பிரதிபலித்தது. கிறிஸ்துமஸ் விழாவின் உணர்வு, நமது சமூகத்தில் நல்லெண்ணம், நல்லிணக்கத்தை ஊக்குவிக்கட்டும்” என்று குறிப்பிட்டுள்ளார். இதனைப் படிக்கும் போது, பிரதமரின் நல்லிணக்க, நல்லெண்ண உணர்வை நாம் மெச்சத் தோன்றும்.

அதேநேரத்தில் **இந்தியாவில் பல மாநிலங்களில் என்ன நடந்தது? கிறிஸ்துமஸ் கொண்டாடிய மக்கள் மீது தாக்குதல் நடந்துள்ளது. பிரதமர் சொன்ன நல்லெண்ணம் எங்கே? நல்லிணக்கம் எங்கே போனது? நல்லிணக்கம் பேசிய பிரதமர், நல்லிணக்கம் கெடும் போது கண்டித்தாரா என்றால் இல்லை.**

*** சத்தீஸ்கர் தலைநகர் ராய்ப்பூரில் கிறிஸ்துமஸ் அமைப்புக்கு எதிராக பா.ஜ.க. ஆதரவு அமைப்புகள் வன்முறையை நடத்தி இருக்கிறார்கள். மேக்னட்டோ வணிக வளாகத்தில் பணியாற்றும் ஊழியர்களிடம் சாதி, மதம் பற்றி கேள்வி கேட்டு மிரட்டல் விடுத்துள்ளார்கள். அந்த வளாகம் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்துக்காக விளக்கு அலங்காரம் செய்யப்பட்டு இருந்தது. ‘பெரிய எண்ணிக்கையிலான நபர்கள் வந்து இங்குள்ள ஊழியர்களிடம் அடையாள அட்டைகளை வாங்கிப் பார்த்தார்கள். இந்துக்களா, கிறிஸ்தவர்களா என்று கேட்டார்கள். அவர்கள் நடத்திய தாக்குதலில் 20 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சேதம் அடைந்தது.” என்று அந்த வணிக வளாகப் பொறுப்பாளர் பேட்டி அளித்துள்ளார்.**

*** மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரின் சில பகுதிகளில் கிறிஸ்தவ வழிபாட்டுக் கூட்டங்களில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மாற்றுத் திறனாளிகளுக்காக நடத்தப்பட்ட கொண்டாட்டத்தில் பார்வையற்ற சிறுமியைக் கேலி செய்து பேசி இருக்கிறார் பா.ஜ.க. பிரமுகர்.**

*** டெல்லியில் ஒரு பகுதியில் சாண்டா கிளாஸ் தொப்பி அணிந்த பெண்களை விரட்டி அடித்திருக்கிறது ஒரு கும்பல்.**

*** ஒடிசாவில் கிறிஸ்துமஸ் தொப்பிகளை விற்ற ஒருவன் கொடுமைப் படுத்தப்பட்டு அடித்து விரட்டப்பட்டுள்ளான்.**

*** உத்தரகாண்டில் ஒரு உணவு விடுதியில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் தடுக்கப்பட்டுள்ளது.**

*** உத்தரப்பிரதேச மாநில அரசு கிறிஸ்துமஸ் நாளில் விடுமுறையை ரத்து செய்து, முன்னாள் பிரதமர் வாஜ்பாய் பிறந்த நாளைக் கொண்டாட கல்வி நிலையங்களுக்கு கட்டளை இட்டது.**

*** கேரளாவில் அஞ்சல் நிலையங்களில் நடத்தப்பட்ட கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் பா.ஜ.க.வுடன் தொடர்புடைய பி.எம்.எஸ். தொழிற்சங்கத்தினர், ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கீதங்களைப் பாட வேண்டும் என்று கட்டாயப்படுத்தியதாகவும், இதனால் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களை திருவனந்தபுரம் தபால் நிலைய தலைமை அதிகாரி ரத்து செய்ததாகவும் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் சொல்லி இருக்கிறார். பாலக்காடு மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது சங் பரிவார் அமைப்பினர் தாக்குதல் நடத்தியதாகவும் அவர் சொல்லி இருக்கிறார்.**

*** அசாமில் பள்ளி ஒன்றில் செய்யப்பட்டு இருந்த கிறிஸ்துமஸ் அலங்காரங்களை ஒரு கும்பல் புகுந்து சீர்குலைத்துள்ளது. நான்கு பேர் கைது செய்யப்பட்டு உள்ளார்கள். இது தொடர்பாக அசாம் மாநில காவல் துறை அதிகாரி ஒருவர் அளித்த பேட்டியில், “வி.எச்.பி. அமைப்பின் நல்பாரி மாவட்டச் செயலாளர், மாவட்டத் இணைச் செயலாளர், துணைச் செயலாளர், பஜ்ரங் தளம் அமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகிய நால்வரைக் கைது செய்து உள்ளனர். சம்பந்தப்பட்ட பள்ளிக்கு வந்த அவர்கள், ‘ஜெய் ஸ்ரீராம்’ என்று முழக்கம் எழுப்பியதுடன் பள்ளி வளாகத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தை நடத்தக் கூடாது என்று எச்சரித்தனர். கிறிஸ்துமஸ் பொருட்கள் விற்ற கடைகளைக் கொளுத்தினர்.” என்று சொல்லி இருக்கிறார். இதனை அம்மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. முதலமைச்சர் ஹிமந்த விஸ்வ சர்மா ஒப்புக் கொண்டுள்ளார்.**

- நாடு எத்தகைய அச்சம் மிகு சூழ்நிலையை பா.ஜ.க., பஜ்ரங் தள், சங் பரிவார் அமைப்புகளால் சந்தித்து வருகிறது என்பதற்கு இவை ஒரு வார எடுத்துக் காட்டுகள் ஆகும். கிறிஸ்துமஸ் நேரத்தில் நடக்கும் சம்பவங்கள் என்பதால் ஊடகங்களில் வெளியாகிறது. மற்ற நேரமாக இருந்தால் அந்த மாநிலத்தை விட்டு இவை வெளியில் வராது.

தமிழ்நாடு ஆயர் பேரவைத் தலைவர் ஜார்ஜ் ஆரோக்கியசாமி அவர்கள் வெளியிட்ட அறிக்கையில், “கிறிஸ்தவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் அந்த மதத்தினரை மட்டும் பாதிப்பதில்லை. அது இந்திய சமூகத்தின் ஒற்றுமை, மனிதநேயம், அரசியலமைப்பின் மதச்சார்பின்மை ஆகிய அடிப்படை மதிப்புகளைப் பாதிக்கிறது. இத்தகைய தாக்குதல்கள் சிறுபான்மை சமூகங்களின் பயம், பாதுகாப்பற்ற உணர்வு, சட்டத்தின் மீது நம்பிக்கை குறைதல், மதங்களுக்கு இடையிலான உறவுகளில் விரிசல் போன்ற விளைவுகளை ஏற்படுத்துகின்றன” என்று சொல்லி இருக்கிறார்கள். இதுதான் உண்மை ஆகும்.

பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில், பா.ஜ.க. அதிகம் தலைதூக்கும் மாநிலங்களில் எத்தகைய அச்சம்மிகு சூழல் இருக்கும் என்பதை இவை எடுத்துக் காட்டுகிறது. ஏதாவது ஒரு காரணத்தைக் கண்டுபிடித்து கலவரத்தை உருவாக்குவதும், அதனை மதத்தைக் காப்பதற்காகச் சொல்லிக் கொள்வதும் பா.ஜ.க. ஆதரவு அமைப்புகளின் பசப்பான வார்த்தைகள் ஆகும்.

**தங்களது சுயநலனுக்காக ரத்தம் குடிக்க அலையும் கும்பலாக அது இருக்கிறது என்பதை தமிழ்நாடு உணர்ந்ததைப் போல மற்ற மாநிலங்களும் தெளிவாக உணர வேண்டும்.**

இவை அனைத்தும் யார் கொடுக்கும் தைரியத்தால் நடக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு கொடுக்கும் தைரியத்தால் தான் நடக்கிறது.

## 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டி! இந்திய சர்வதேச

# இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன் ஷிப் - 2026!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் – முன்னேற்பாட்டுப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்!

**சென்னை, டிச.30**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 மற்றும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று (29.12.2025) தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படவுள்ள இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப்போட்டி சாம்பியன் ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டிகளுக்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு தமிழ்நாட்டின் வீரர்கள் பிற நாடுகளுக்குச் சென்று சர்வதேச போட்டிகளில் பதக்கங்கள் வெல்ல செய்வதோடு நிற்காமல், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் பங்குபெறும் வகையில் சென்னையில் ஆசிய, சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை தொடர்ந்து நடத்தி, சென்னையை இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாகவும், உலகின் முக்கிய நகரமாகவும் உருவாக்கி வருகிறது.

**சதுரங்க விளையாட்டு வீரர் - வீராங்கனைகள்!**

அதன் அடிப்படையில் மாமல்லபுரத்தில் 186 நாடுகளைச் சார்ந்த சதுரங்க விளையாட்டு வீரர், வீராங்கனைகள் பங்கேற்ற 44வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி, உலகமே சென்னையின் அழகை கண்டுகளித்த சென்னை பார்முலா 4 இரவு நேர சாலை கார் பந்தையம், சென்னை ஓபன் (WTA) சர்வதேச டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2022 போட்டி, ஸ்குவாஷ் உலகக் கோப்பை 2023 போட்டி, 7ஆவது “ஆசிய ஹாக்கி சாம்பியன்ஸ் டிராபி (ஆடவர்) சென்னை - 2023” போட்டி, 2023ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச அளவிலான உலக சர்ஃபிங் லீக் போட்டி, HCL சைக்ளோத்தான் (CYCLOTHON) போட்டி, ஏடிபி சேலஞ்சர் 100 சர்வதேச ஆண்கள் டென்னிஸ் போட்டி, ”சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் 2025” என பல்வேறு சர்வதேச போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

சமீபத்தில் 28.11.2025 முதல் 10.12.2025 வரை சென்னை மற்றும் மதுரையில் ஹாக்கி ஜூனியர் ஆடவர் உலகக் கோப்பை தமிழ்நாடு 2025 போட்டிகள் சிறப்பாக நடத்தப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிற்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப் போட்டி சாம்பியன்ஷிப் 2026 (SDAT INDIA INTERNATIONAL YOUTH SAILING CHAMPIONSHIP IIR) மற்றும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்திய, சர்வதேச இளையோர் பாய்மரப் படகுப்போட்டி சாம்பியன் ஷிப் 2026 போட்டியொட்டி, சென்னையில் 6.1.2026 முதல் 9.1.2026 வரை பல்வேறு வகையிலான படகுப்போட்டிகள், பாய்மரப் பலகை சறுக்கு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளில் இந்தியா, அயர்லாந்து, சீசெல்ஸ், மொரிசியஸ், ஈராக், ஐக்கிய அரபு எமிரேட்ஸ், அல்ஜீரியா, ஸ்ரீலங்கா, மலேசியா, தைவான், ஸ்வீடன், ரஷ்யா மற்றும் இங்கிலாந்து ஆகிய 13 நாடுகளைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ள உள்ளனர். இதுவரை பாய்மரப் படகுப்போட்டிகளை தொலைக்காட்சிகளில் மட்டுமே பார்த்து ரசித்த சென்னை மக்களுக்கும் இந்திய ரசிகர்களுக்கும் இந்த போட்டி நீங்காத நினைவுகளை அளிக்கும்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் 5150 டிரையத்லான் சென்னை 2026 போட்டியையொட்டி 1.50 கி.மீ நீச்சல், 40 கி. மீ சைக்கிளிங், 10 கி.மீ ஓட்டம் என மொத்தம் 51.50 கி.மீ தூரம் கொண்ட இரும்பு மனிதன் 5150 டிரையத்லான் சென்னை போட்டி 10.1.2026 மற்றும் 11.1.2026 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

இப்போட்டிகளில் 1.50 கி.மீ தூரம் கொண்ட நீச்சல் போட்டி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் நீலக்கொடி கடற்கரையில் தொடங்கி கோவளம் கடற்கரை வரையிலும், 40 கி.மீ. தூரம் கொண்ட சைக்கிளிங் போட்டி கோவளம் பீச் முதல் நெம்மேலி கடல்நீர் சுத்திகரிப்பு நிலையம் வழியாக MGM பீச் ரிசார்ட் வரையிலும், 10 கி.மீ தூரம் கொண்ட ஓட்டப்பந்தயம் MGM பீச் ரிசார்ட் தொடங்கி கிழக்கு கடற்கரை சாலையில் மாயாஜால் வரையிலும் என 51.50 கி.மீ தூரத்திற்கு நடைபெற உள்ளது. இந்தப்போட்டிகளில் 1,200க்கும் மேற்பட்ட இந்திய மற்றும் சர்வதேச விளையாட்டு வீரர்கள் பங்கேற்க பதிவு செய்துள்ளனர்.

**இரண்டு போட்டிகளையும் சிறப்பாக நடத்துவோம்!**

இந்த இரண்டு போட்டிகளையும் சிறப்பாக நடத்தி தமிழ்நாட்டின் பெருமையை உலகறிய செய்யும் வகையில் போக்குவரத்து, பாதுகாப்பு, அவசர மருத்துவ சேவைகள், தங்குமிட வசதி, வீரர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் உள்ளிட்ட பல்வேறு முன்னேற்பாடு பணிகள் குறித்து துணை முதலமைச்சர் அவர்கள் அனைத்து துறை அலுவலர்களுடனும் கலந்தாலோசனை மேற்கொண்டார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை, கடற்படை, கடலோர காவல்படை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை கிழக்கு மாவட்ட

# கழக நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்!

*சென்னை, டிச.30-*

*சென்னை கிழக்கு மாவட்டக்கழக நிர்வாகிகள், பகுதிக்கழச் செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், 29.12.2025 ஞாயிற்றுக்கிழமை, காலை சென்னை, ஓட்டேரி, பிரிக்ளின் சாலை, எஸ்.ஆர். பேலஸில் அவைத்தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.*







*இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள்: ப.தாயகம்கவி, ஜோசப்சாமுவேல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: ப.ரங்கநாதன், கே.எஸ்.ரவிச்சந்திரன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எம்.விஜயகுமார், கே.எஸ்.எம்.நாதன், பரிதிஇளம்சுருதி, வே.உமாகாந்தன், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவகர், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராசன்,*

*பகுதிக் கழக செயலாளர்கள்: எம்.சாமிக்கண்ணு, செ.தமிழ்வேந்தன், கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், DSP.ராஜகோபால், MTR நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.ராஜசேகர். தொகுதி பார்வையாளர்கள்: என்.கிருஷ்ணமூர்த்தி, இரா.நரேந்திரன், பி.முனியாண்டி, ஒ.ஏ.நாகலிங்கம். பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, டி.வி.செம்மொழி, பி.ஜே.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், சரிதா மகேஷ்குமார், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், பி.உதயசங்கர், ஏ.பி.பூர்ணிமா, அ.நிர்மலாதேவி, எம்.இப்ராஹிம்கனி, ஆர்.கலைச்செல்வி, நந்தீஸ்வரன், சுரேஷ்.*

*மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: வானவில் விஜய், க.வினோத், எஸ்.தனசேகர், L.P.F. மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், P.விஜயகுமார், இரா.வீரமணி, மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, கா.ராஜா முகம்மது, ஜி.பி.பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், எம்.விநாயகம், து.ஆயிரம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர்.ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாகவள்ளி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆகியோர் பெருந்திரளாக கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் வட்டக் கழக செயலாளர் எஸ்.சசிகுமார் நன்றி கூறினார்.*

**தீர்மானம் 1:**

*23/12/2025 செவ்வாய்க்கிழமை அன்று கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற இனிய கிறிஸ்துமஸ் பெருவிழாவில் 3250 கிறிஸ்தவ சகோதர சகோதரிகளுக்கு கிருஸ்துமஸ் வாழ்த்துக்கள் தெரிவித்து பரிசு பொருட்கள் வழங்கி சிறப்பித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும்,*

*21.12.2025 ஞாயிற்றுக்கிழமை திரு.வி.க நகர் மற்றும் துறைமுகம் தொகுதியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெருவிழாவிலும், தொடர்ந்து 28/12/2025 ஞாயிற்றுக்கிழமை அன்று துறைமுகம் சட்டமன்ற தொகுதியில்*

*33/11 KV துணை மின் நிலையம் திறப்பதற்கும், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகளை துவக்கி வைப்பதற்கும் வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இக்கூட்டம் மனமார்ந்த நன்றியை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியது.*

**தீர்மானம் 2:**

*19/12/2025 அன்று தேர்தல் ஆணையத்தால் வெளியிடப்பட்ட சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், துறைமுகம், திரு.வி.க நகர், எழும்பூர், வில்லிவாக்கம், அம்பத்தூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளுக்கான வரைவு வாக்காளர் பட்டியல் சரி பார்த்தல் பணியில் BLA2, BDA, BLC இணைந்து கழகத்தினர் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்த்தும், வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர் பெயர்களையும், புதிதாக இடம்பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களையும் படிவம் 6ல் சேர்த்திடும் முக்கிய பணியிலும், பூத் வாரியாக ASD பட்டியலை சரிபார்த்து அதில் உண்மையாக உள்ள வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டிருந்தால் அவர்களது பெயர் மீண்டும் அந்த பூத் வாக்காளர் பட்டியலில் சேர்த்திடவும் இந்திய தேர்தல் ஆணையத்தால் இரண்டாம் கட்டமாக ஜனவரி 3/01/26 மற்றும் 04/01/26 ஆகிய இரண்டு நாட்கள் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு முகாமில் சேர்த்திடவும் உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.*







சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற மதிப்பீட்டுக் குழுவின் (Committee on Estimates) கலந்தாலோசனைக் கூட்டத்தில், கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் கலந்து கொண்டார். மேலும் இக்கூட்டத்தில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் கலாநிதி வீராசாமி, புதுச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் வி.வைத்தியலிங்கம், தமிழ்நாடு மின்வாரிய நிறுவனத் தலைவரும் கூடுதல் தலைமைச் செயலாளருமான மருத்துவர்.ஜெ.ராதாகிருஷ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசு உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.